**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.749/2023**
**வழக்கு சாட்சி PW – 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணப்பன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2024.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் இராவுத்தர்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் துப்பாக்குடி பஞ்சாயத்தில் தண்ணீர் திறக்கும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் நிலப்பிரச்சனை உள்ளது. கடந்த 19.09.2022 ம் தேதி, இரவு 08.00 மணிக்கு நான் பாப்பாங்குளம், பலசரக்கு கடையிலிருந்து என் லோடு ஆட்டோவில் எனது பலசரக்கு கடைக்கு சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்து கொண்டிருந்தேன். நான் பாப்பாக்குளத்திலிருந்து கிழக்கு நோக்கி வரும்போது, இந்திராநகருக்கு மேல்புறம் கேரளாகாட்டிற்கு பக்கம் வந்தபோது, எதிரி அண்ணாமலை சிமெண்ட் கலர் குவாலிஸ் காரில் குறுக்கே வந்து என்னை வழிமறித்து என்னிடம் ஸ்பேனர் கேட்டார். நான் அவரிடம் இப்படியா? வந்து ஸ்பேனர் கேட்பது? என்னிடம் ஆட்டோவிற்கான ஸ்பேனர் தான் உள்ளது. காருக்கான ஸ்பேனர் இல்லை என்று கூறினேன். அப்போது எதிரி அண்ணாமலை அரிவாளுடன்

ஓடிவந்து, தேவடியா மவனே, செத்து தொலைடா? என்று கூறி, என் தலையை நோக்கி வெட்ட வந்தார். நான் சுதாகரித்து விலகவும், அந்த வெட்டு எனது இடது முழங்கை அருகில் பட்டது. அப்போது நான் அரிவாளை பிடித்துக்கொண்டேன். அப்போது அண்ணாமலை எதிரி கண்ணனை கூப்பிட்டார். எதிரி கண்ணன், தேவடியா மவனே, இதோடு செத்த? என்று கூறி, எனது இடது பக்க தோள்பட்டையிலும், தலையிலும் கம்பால் அடித்தார். நான் ஆட்டோ விட்டு வெளியே வந்து ஓட பார்த்தபோது, எதிரி குமாரை கூப்பிட்டார். அவர் என்னை செத்து தொலை டா? என்று கூறி, வலது கன்னத்தில் ஓங்கி அடித்தார். இதோடு உன் கதை முடிந்தது என்று சொன்னார். அப்போது நான் கேரளாகாட்டு வேலியைத் தாண்டி கீழே விழுந்து விட்டேன். அப்போது எதிரிகள் என்னை கொஞ்சம் தூரம் விரட்டி வந்தார்கள். சிறிது தூரம் சென்றபின் நான் திரும்பி பார்த்தபோது, எதிரிகள் காரை எடுத்துக்கொண்டு இடைகால் நோக்கி சென்று விட்டார்கள். நான் நடந்து இரத்தக்கறையுடன் ஊரிலுள்ள பிள்ளையார் கோவில் பக்கம் நடந்து சென்றேன். நான் பிள்ளையார் கோவில் பக்கமுள்ள முருகன் வீட்டு முன்பு நிலை தடுமாறி அங்கேயே உட்கார்ந்து விட்டேன். அங்கு ஊர் நாட்டாமையும், முருகனும் வந்தார். அப்போது எனது அப்பா கிருஷ்ணன், மனைவி ஆறுமுகக்கனியும் அங்கு வந்தார்கள். அங்கு வந்த இராமச்சந்திரன் 108 க்கு போன் செய்து, ஆம்புலன்ஸ் மூலம் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் அங்கு வந்த போலீசார் என்னிடம் நடந்த சம்பவம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். நான் மருத்துவமனையில் 6 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படும் அரிவாள் தான் என்னை வெட்ட பயன்படுத்திய

அரிவாள். அந்த அரிவாள் அ.சா.பொ.1. என்னிடம் காண்பிக்கப்படும் கம்பு என்னை அடிக்க பயன்படுத்திய கம்பாகும். அந்த கம்பு அ.சா.பொ.2. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

பாப்பாங்குளத்திலிருந்து நாலான்கட்டளை செல்லும் சாலையில் கிழக்கு நோக்கி எங்களது ஊர் இராவுத்தர்பேரி உள்ளது என்றால் சரிதான். கிழக்கு நோக்கி செல்லும் ரோடு 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் ஒன்றரை கி.மீ தூரம் இருக்கும். அந்த ரோட்டின் இருபுறங்களிலும் கேரளாக்காரர்கள் நிறைய பேர் இடம் வாங்கி போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் புகார் கொடுக்கும் போது, எந்த கேரளாக்காரர் இடத்தின் அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் புகாரில் அண்ணாமலை என்னை அரிவாளால் வெட்டினார் என்றும், கண்ணன் என்னை கம்பால் அடித்தார் என்றும், குமார் என்னை கையால் அடித்தார் என்றும் குறிப்பிட்டு கூறித்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையில் கண்ணா, இவனை விடாதே? குமார், இவனை அடித்து கொல், என்று கூறிய விபரங்களை புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி அண்ணாமலை சம்பவத்தின் போது, என்னிடம் வந்து ஸ்பேனர் கேட்டார் என்ற விபரத்தை பெயரைக் குறிப்பிட்டு புகார் வாக்குமூலத்திலும், போலீசிடம் நான் கொடுத்த வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் அடுத்த நாள் மதியம் ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் கொடுத்தேன். நான் புகார் வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். நான் குறிப்பிட்டுள்ள எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு புகார் எழுதப்படாமல்

வேறு மாதிரி எழுதியிருந்தால் அது நான் கொடுத்த புகார் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று அம்பை மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்கள். சம்பவ இடத்திற்கும் போலீசார் வந்தார்கள். சம்பவயிடத்திற்கு போலீஸ் வந்து தான், என்னை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு காலையில் எனது சகோதரிகள் மரகதம், உஷாதேவி ஆகியோர் வந்தார்கள் என்றால் உஷாதேவி நான் வாக்குமூலம் கொடுக்கும் போது வந்தார். சாட்சி வெட்டும்பெருமாள் எனது மைத்துனர் என்றால் சரிதான். சாட்சி ஆறுமுகக்கனி எனது மனைவி. சாட்சி இராமநாடார் மகன் முருகன் எனது மாமனார். சாட்சிகள் கிருஷ்ணன் மற்றும் வைரம்மாள் எனது பெற்றோர். சாட்சி இராமசுந்தரம் எனது பெரியப்பா மகன். நான் முதல் விசாரணையில் கூறிய வழக்கு விபரங்கள் என்னை தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். எனக்கும், எதிரிகளுக்கும் நேரடியான இடப்பிரச்சனை இல்லை என்றால் சரிதான். எனது தங்கைக்கும், எதிரிகளுக்கும் தான் இடப்பிரச்சனை. மரகதம் வாங்கியதாக கூறப்படும் இடம் பொன்னுச்சாமி நாடார் இடம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக ஆழ்வார்குறிச்சி ஆய்வாளர் என்னை சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார். அப்போது மதியம் 02.00 மணியிருக்கும். நான் என் வீட்டோடு சேர்த்து பலசரக்கு கடை வைத்துள்ளேன். மேலும் டெக்கரேஷன் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது, என்னுடைய செல்போனை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. ஆட்டோவை சம்பவம் நடந்த அன்று இரவே எங்கள் ஊர்க்காரர்கள் எடுத்துகொண்டு வந்தார்கள். நான் எனது ஊரில் திருமணமான ஒரு

பெண்ணிற்கு ஆபாசமான குறுந்தகவல் அனுப்பினேன் என்றும், அது சம்பந்தமாக எங்கள் ஊரில் என் மேல் பகை இருந்தது என்றால் சரியல்ல. அதனால் தான் நான் எனது செல்போனை போலீஸ் விசாரணைக்கு கொடுக்காமல் இருந்தேன் என்றால் சரியல்ல. அந்த முன்விரோதத்தை மனதில் வைத்து, எனக்கு வேறு எங்கோ, ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் மீது உண்மைக்கு மாறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி தாமரைக்கனிக்கு சிவந்திபுரத்தில் திருமணமாகி உள்ளது என்றால் சரிதான். அவருடைய மதினி வளர்மதி காவல்துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். அவருடைய ஏற்பாட்டின் பேரில் தான் இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No.749/2023
## வழக்கு சாட்சி PW – 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெட்டும்பெருமாள் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2024.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் இராவுத்தர்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையிலுள்ள ஒரு சூப்பர் மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா கணவர். ஆஜர் எதிரிகளில் எனக்கு ஜெயராணியை மட்டும் தெரியும். அ.சா.1ன் வீட்டிற்கு பக்கத்தில் தான் எதிரி ஜெயராணி வீடு உள்ளது. அ.சா.1ன் தங்கை மரகதம், கணவர் இல்லாமல் வாடகை வீட்டில் எங்கள் ஊரில் வாழ்ந்து வருகிறார். அவர் சொந்த வீடு கட்டுவதற்காக எதிரி ஜெயராணியிடம் இடம் வாங்கியுள்ளார். இடத்தை விற்கும் போது, 6 செண்ட் என்று கூறியுள்ளார். ஆனால் அளந்து பார்க்கும் போது, 4.6 செண்ட் தான் இருந்தது. ஒரு சென்ட்டிற்கு ரூ.31,000/– கிரையத் தொகையாகும். 6 சென்ட்டிற்கான ரூபாயை முதலிலேயே கொடுத்து விட்டார்கள். இடம் குறைவாக இருந்ததினால் மீதி தொகையை கேட்டுள்ளார்கள். அதற்கு எதிரி ஜெயராணி பிறகு பணம் தருவதாக கூறியிருக்கிறார். எதிரி ஜெயராணி சென்னையிலிருந்து

திருவிழாவிற்கு ஊருக்கு வந்தபோது, பணம் கேட்டபோது, பணம் தரமுடியாது என்ற கூறியிருக்கிறார். அப்போது அ.சா.1 எதிரி ஜெயராணியின் தகப்பனாரிடம் பணத்தை வாங்கிக்கொடுங்கள் என்று கேட்டுள்ளார். அதற்கு அவர் ஊருக்கு போகும் பணத்தை வாங்கித் தருவதாக கூறினார். அ.சா.1 எதிரி ஜெயராணியிடம் போன் மூலம் பணத்தை கேட்டதற்கு, பணத்தை தரமுடியாது என்றும், உன்னால் என்ன செய்ய முடியுமோ? பார்த்துக்கொள் என்று கூறினார். அப்போது அ.சா.1 எதிரி ஜெயராணியிடம் பணத்தை கொடுக்கவில்லை என்றால், கேஸ் கொடுப்பேன் என்று கூறியிருக்கிறார். அதற்கு எதிரி ஜெயராணி நீ உயிரோடு இருந்தால் தானே, வழக்கு தொடுப்பாய், உன்னை கொன்று விடுவேன் என்று கூறியிருக்கிறார். அதை அ.சா.1 பெரிதாக எடுக்கவில்லை. 19.09.2022ம் தேதி, இரவு 07.30 மணிக்கு அ.சா.1க்கு புதிய போன் நம்பரிலிருந்து, நாலாம்கட்டளையில் எங்கள் தங்கைக்கு சடங்கு வைத்திருக்கிறோம், நீங்கள் டெக்கரேஷன் செய்ய வேண்டும், வந்து டெக்கரேஷனுக்கான பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அறிமுகம் இல்லாத நபர் என்பதினால் அட்வான்ஸ் பிரச்சனை இல்லை, நான் டெக்கரேஷன் செய்து விட்டு, பணத்தை வாங்கிக்கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார். மறுபடியும் போன் செய்து, ஊருக்கு கிழக்கே வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அப்போது அ.சா.1 நான் பாப்பாங்குளத்தில் சாமான் வாங்கிக்கொண்டிருக்கிறேன், நான் வரமுடியாது என்று சந்தேகத்தில் சொல்லியுள்ளார். அப்போது அ.சா.1 சாமான்கள் வாங்கிவிட்டு, எங்கள் ஊருக்கு மேல்புறமுள்ள கேரளாகாட்டுபக்கம் வந்தபோது, குவாலிஷ் காரை குறுக்கே விட்டு விட்டு, ஸ்பேனர் கேட்டுள்ளார்கள். அவர் ஸ்பேனர் இல்லை என்று கூறினார். அப்போது ஒருவர் அரிவாளால் தலைக்கு குறி

வைக்க, அவர் விலகவும், அந்த வெட்டு அவர் கையில் பட்டது. அரிவாளை அ.சா.1 பிடித்து கொண்டார். ஒருவர் கட்டையாலும், ஒருவர் கையாலும் அடித்துள்ளார். பின்னர் அ.சா.1 முள்வேலியை தாண்டி ஓடிவிட்டார். ஓடும்போது இவனை கொல்லாமல் விடக்கூடாது என்று கூறி, துரத்தியுள்ளார்கள். அவர்கள் காரை எடுத்துக்கொண்டு கிளம்பியுள்ளார்கள். பின்னர் ஊருக்குள் வந்து அ.சா.1 அவங்க அப்பாவுக்கு தகவல் சொல்லியுள்ளார். பின் என் அக்காவும், என் அப்பாவும் ஆம்புலன்ஸ் மூலம் அம்பை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். நான் இதை கேள்விப்பட்டு சென்னையிலிருந்து வந்து அ.சா.1 ஐ மருத்துவமனையில் வந்து பார்த்தேன். அங்கு வந்த காவல் ஆய்வாளரிடம் அ.சா.1 என்னை தாக்கியது அண்ணாமலை போல் தெரிந்தது என்று கூறினார். பின்பு அங்கு வந்த அ.சா.1 ன் தங்கை உஷாதேவியும் ஆய்வாளரிடம், தன்னிடம் ஜெயராணி பணம் கேட்டு தொந்தரவு செய்த உன் அண்ணனை கொலை செய்வதற்கு ஆள் அனுப்பியதாக சொன்னதாக சொன்னார். உஷாதேவியும் விளையாட்டிற்கு சொன்னதாக நினைத்து அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்று கூறினார். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

வழக்கு சம்பவத்தின் போது, நான் சென்னையில் இருந்ததினால் இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சென்னையிலிருந்து அடுத்த நாள் காலை 06.00 மணிக்கு வந்தேன். நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு சென்று ஒன்று, இரண்டு மணிநேரத்தில் காவல் ஆய்வாளர் அங்கு வந்தார்.

அவர் வரும்போது காலை 08.00 மணியிருக்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரித்து கொண்டிருக்கும்போது, உஷாதேவி அங்கு வந்தார். கண்ணப்பனிடம் விசாரித்து விட்டு, உஷாதேவியிடம் ஆய்வாளர் விசாரித்து விட்டு, புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனது மைத்துனர் என்பதினால், நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No.749/2023**</u>

<u>**வழக்கு சாட்சி PW – 3**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகக்கனி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2024.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் இராவுத்தர்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் பலசரக்கு வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரி ஜெயராணியை மட்டும் எனக்கு தெரியும். என் மதினி மரகதம் கணவரை இழந்தவர். அவர் எங்கள் ஊரில் வாடகை வீட்டில் குடியிருக்கிறார். அப்போது ஜெயராணியின் மாமா பொன்னுச்சாமி இடத்தை கொடுப்பதாக சொன்னார். என் கணவர் என் மதினி மரகத்திற்காக இடத்தை முடித்தார். எதிரி 6 சென்ட் இடம் என்று கூறினார். அவர் அவசரமாக பணம் கேட்டதினால் 6 சென்ட்டிற்கும், ஒரு சென்ட்டிற்கு ரூ.31,000/– கிரையத் தொகையாகும். 6 சென்ட்டிற்கான ரூபாயை முதலிலேயே கொடுத்து விட்டார்கள். இடம் குறைவாக இருந்ததினால் மீதி தொகையை கேட்டுள்ளார்கள். மீதி பணத்தை திரும்ப கொடுத்த பிறகு பத்திரத்தை முடிக்கலாம் என்று இருந்தோம். ஆனால் எங்கள் ஊர் பஞ்சாயத்து தலைவர் பணத்தை பிறகு வாங்கித் தருகிறோம். தற்போது பத்திரத்தை

முடியுங்கள் என்று கூறினார். பிறகு என் கணவர் ஜெயராணியின் அப்பாவிடம் பணம் கேட்டார். அதற்கு அவர் எனக்கு தெரியாது, நீ ஜெயராணியிடம் வாங்கிக்கொள் என்று கூறியிருக்கிறார். அதனால் என் கணவர் எதிரி ஜெயராணிக்கு போன் செய்திருக்கிறார். அதற்கு அவர் பணத்தை தருவதாக கூறியிருக்கிறார். அதற்கு அவர் ஊருக்கு போகும் பணத்தை வாங்கித் தருவதாக கூறினார். அ.சா.1 எதிரி ஜெயராணியிடம் போன் மூலம் பணத்தை கேட்டதற்கு, பணத்தை தரமுடியாது என்றும், நீ அடிக்கடி போன் செய்து கேட்டால் உன்னை ஆளை வைத்து கொன்று விடுவேன் என்றும் கூறியிருக்கிறார். பின்னர் என் கணவர் ஜெயராணியிடம் பணம் கேட்டபோது, எதிரி ஜெயராணி எனது மதினி உஷாதேவியிடம் போன் செய்து, உன் அண்ணன் அடிக்கடி பணம் கேட்கிறான். அவனை ஆள் வைத்து கொன்று விடுவேன் என்று கூறியிருக்கிறார். 19.09.2022ம் தேதி, இரவு 07.30 மணிக்கு கடைக்கு சாமான் வாங்குவதற்காக பாப்பாங்குளம் சென்றபோது, எதிரிகள் என் கணவருக்கு புதிய போன் நம்பரிலிருந்து, ஐந்தாம்கட்டளையில் எங்கள் தங்கைக்கு சடங்கு வைத்திருக்கிறோம், நீங்கள் டெக்கரேஷன் செய்ய வேண்டும், வந்து டெக்கரேஷனுக்கான பணத்தை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அறிமுகம் இல்லாத நபர் என்பதினால் அட்வான்ஸ் பிரச்சனை இல்லை, நான் டெக்கரேஷன் செய்து விட்டு, பணத்தை வாங்கிக்கொள்கிறேன் என்று கூறியிருக்கிறார். மறுபடியும் போன் செய்து, சுகர் பேக்ட்ரி வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அப்போது என் கணவர் நான் பாப்பாங்குளத்தில் சாமான் வாங்கிக்கொண்டிருக்கிறேன், நான் வரமுடியாது என்று சந்தேகத்தில் சொல்லியுள்ளார். நான் கடையில் இருக்கும்போது, ஒரு நபர் வந்து கடையில் சாமான் வாங்குவது போல வாங்கிக்கொண்டு, கடையில்

எட்டி பார்த்தார். அப்போது காரில் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்களை நான் பார்க்கவில்லை. எனது கணவர் சாமான்கள் வாங்க போய்விட்டார் என்று தெரிந்து கொண்டு, என் கணவர் சாமான்கள் வாங்கிவிட்டு, எங்கள் ஊருக்கு மேல்புறமுள்ள கேரளாகாட்டுபக்கம் வந்தபோது, குவாலிஷ் காரை குறுக்கே விட்டு விட்டு, ஸ்பேனர் கேட்டுள்ளார்கள். அவர் ஸ்பேனர் இல்லை என்று கூறினார். அப்போது ஒருவர் அரிவாளால் தலைக்கு குறி வைக்க, அவர் விலகவும், அந்த வெட்டு அவர் கையில் பட்டது. அரிவாளை என் கணவர் பிடித்து கொண்டார். ஒருவர் கட்டையாலும், ஒருவர் கையாலும் அடித்துள்ளார். பின்னர் என் கணவர் முள்வேலியை தாண்டி ஓடிவிட்டார். ஓடும்போது இவனை கொல்லாமல் விடக்கூடாது என்று கூறி, துரத்தியுள்ளார்கள். எனது கணவர் செல்போனை ஆட்டோவில் போட்டு விட்டு ஓடியுள்ளார். அவர்கள் காரை எடுத்துக்கொண்டு கிளம்பியுள்ளார்கள். பின்னர் ஊருக்குள் வந்து என் கணவர் எங்களுக்கு தகவல் சொல்லியுள்ளார். பின் என் கணவரை நானும், என் அப்பாவும் ஆம்புலன்ஸ் மூலம் அம்பை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

சம்பவம் நடந்த அன்று இரவு 07.30 மணிக்கு என் கடைக்கு ஒரு நபர் வந்து, சாமான்கள் வாங்குவது போல் கடையை நோட்டம் விட்டார் என்றும், 2 பேர் காருக்குள்ளே இருந்தார்கள் என்ற விபரத்தை நான் போலீசார் விசாரிக்கும் போது கூறினேன். எனது கணவரை செல்போன் மூலம் டெக்கரேஷன் செய்வதற்கு அழைத்தார்கள் என்ற விபரத்தை போலீசாரிடம்

கூறினேன். சம்பவத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே மரகதம் பேரில் அந்த இடம் பதியப்பட்டது என்றால் சரிதான். பொன்னுச்சாமி நாடாரிடம் இருந்து சொத்திற்கான பத்திரங்களை வாங்கி, அதில் இருந்து 3 மாதங்கள் கழித்து தான் இடம் பதியப்பட்டது என்றால் சரிதான். முன் பணம் ரூ.10,000/– போக மீதித்தொகை பத்திரம் பதியும் போது பொன்னுச்சாமி நாடாரிடம் கொடுக்கப்ட்டது என்றால் சரிதான். அட்வான்ஸ் தொகை கொடுக்கும்போதும், பத்திரம் பதிவு செய்யும் போது ஜெயராணி சென்னையில் இருந்தார் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக ஊர் நாட்டாமையிடம் பேசி, அவர் இருதரப்பினரையும் பேசி சமாதானப்படுத்தி விட்டார் என்றால் சரிதான். அந்த சமாதானத்தின் பேரில் பொன்னுச்சாமி நாடார் ரூ.15,000/–ஐ திரும்ப கொடுத்து விட்டார் என்றால் சரிதான். எனது கணவர் தாக்கப்பட்டதை நானோ, எனது குடும்ப உறுப்பினர்களோ நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு வேறு எங்கோ வைத்து ஏற்பட்ட காயத்திற்கு பொய்யாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.